திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் 984 இடங்கள் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்டு, அதிலே பல இடங்கள் காலியாக இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அந்தத் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் எல்லாம், அந்த இடங்களில் எல்லாம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட இடங்கள்-அதாவது நான் சொன்னது; அந்த மாவட்டத்தில் ஜீவா தொழிற்பயிற்சி நிலையம், முத்துக்காப்பட்டி; வெங்கடேஸ்வரா தொழிற்பயிற்சி மையம், எருமைப்பட்டி; பி.ஜி.பி. தொழிற்பயிற்சி மையம், வேட்டாம்பாடி; கொங்கு தொழிற்பயிற்சி மையம், கீராம்பூர்; ஈஸ்வரா தொழிற்பயிற்சி மையம், இலச்சிபாளையம்; அங்கப்பா தொழிற்பயிற்சி மையம் சௌதாபுரம்; ராஜம்மாள் ரெங்கசாமி தொழிற்பயிற்சி மையம், தொக்கவாடி; திருச்செங்கோடு; கந்தசாமி கந்தன் தொழிற்பயிற்சி மையம், நாமக்கல்; பத்மாவதி தொழிற்பயிற்சி மையம், இராசிபுரம்; சி. இராகவேந்திரா தொழிற்பயிற்சி மையம், இராசிபுரம்; ஆண்டவர் தொழிற்பயிற்சி மையம், நாமக்கல், அதாவது மோகனூர்; இராமகிருஷ்ணா தொழிற்பயிற்சி மையம், குருசாமிபாளையம் ஆகிய 12 இடங்களில் தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இருக்கின்றன. அந்தத் தொழிற்பயிற்சி மையங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இடங்கள்--மொத்த இருக்கைகளின் எண்ணிக்கை--984. அதிலேகூட மாணவர்களுடைய வருகை குறைவாக இருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 183, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

183—

உழவர்களுக்குப் பயிற்சி

***19907—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2003 ஏப்ரல் 7]

நவீன தொழில்நுட்ப நடைமுறைகளைப் பின்பற்றுவதில் உழவர் சங்கங்கள் தீவிரமாகப் பங்கேற்பதை ஊக்குவிக்கும் விதமாக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உழவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

உழவர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

முற்பகல் 10-10

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையிலே, 'நடத்தப்படும்' என்று கூறினார்கள். நம்முடைய மாநிலத்திலே மொத்தம் 29 மாவட்டங்கள் உள்ளன. ஏற்கெனவே 12 மாவட்டங்களில் நடத்துவதாகக் கேள்விப்பட்டேன். விடுபட்டுப்போன மாவட்டங்களிலும் உழவர் பயிற்சி ஆரம்பிக்கும் திட்டம் நம்முடைய அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், விவசாயத் துறையின் மூலமாகக் கிராமங்களில் ஊரக வேளாண்மைப் பணி அனுபவப் பயிற்சி நடத்துகிறார்கள். அதேபோல, வேளாண்மை சார்ந்த தொழிற்சாலை கூட்டுப் பயிற்சியும் நடத்துகிறார்கள். மாணவர்களுக்கும் இளங்கலை வேளாண்மைப் பயிற்சியும் தரப்படுகிறது. அதேபோல், பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நிலையங்களின் புதிய கண்டுபிடிப்புகள் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் மூலம் உழவர்களுக்கு விரைவில் சென்றடைய நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா, எடுக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, விதைச் சான்றளிப்புத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாக விவசாயிகளுக்குப் பல்வேறுபட்ட தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2002-2003-ல் மட்டும், 2,56,398 விவசாயிகளுக்கு ரூபாய் 3,86,50,200 செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளுக்குத் தேவையான பயிற்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் அளிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்ற முகமாக, கோவை மாவட்டம், கொடிசியா வளாகத்திலே நடைபெற்ற வேளாண்மைப் பொருட்காட்சியைப் போல, வேளாண்மைத் துறை சம்பந்தமாகப் புதிய விதைகள், புதிய பயிர் வகைகள் கண்டுபிடிப்பு, நவீன ஒட்டு ரகங்கள், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுகின்ற ஜட்ரோபா பாரடைஸ் போன்ற வகைகள் மற்றும் நவீன வேப்ப மரம் போன்ற பல்வேறு விதமான நவீன கண்டுபிடிப்புகளையெல்லாம் ஒவ்வொரு ஒன்றியத்தின் வாயிலாக அல்லது ஒரு தொகுதிக்கு ஒரு வேளாண்மைப் பொருட்காட்சியாக நடத்துகின்றபோது அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் அதை அறிவதற்கு வாய்ப்பு இருக்கும். எனவே, ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் இதுபோல விவசாயிகள் பயிற்சி பெறுகின்ற முகமாக வேளாண்மைப் பொருட்காட்சி நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயுள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும், ஒவ்வொரு தாலுகாவிலும் இதுபோன்ற கண்காட்சிகள்--தற்போது புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற தொழில்நுட்பங்கள் அடங்கிய கண்காட்சிகள்—நடத்தப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *184*, திரு. செ. தாமோதரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

184—

சாதிச் சான்று

***4236—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—